# இயேசு மனிதருக்குப் புதுவழியாய் இருக்கின்றாரா?

I. *பழைய மற்றும் புதிய வழிகள் ஒரே மாதிரியானவைகளா?*
   1. *பழைய வழியின்கீழ் ஆசாரியர் (பாவ) நிவிர்த்தியை ஒரு மிருகத்தின் ________________ க் கொண்டு ஏற்படுத்தினார். லேவி. 4:30, 31*
   2. *இது __________________ மட்டுமே இருந்தது (எபி. 10:1) இது __________________ நிவிர்த்தி செய்ய மாட்டாது. எபி. 10:4*
   3. *இயேசுவின் __________________ தான் பாவ நிவிர்த்தியின் புது வழியாய் உள்ளது. எபி. 10:19, 20*
   4. *இயேசுவின் ________________________ மூலம் புதிய உடன்படிக்கை உறுதிப்படுத்தப்பட்டது (எபி. 9:16, 17) மற்றும் இந்தக் காரணத்தினால்தான் அது __________________ பிரசங்கிக்கப்படத் தொடங்கிற்று. லூக். 24:46, 47*

II. *புது வழியானது போதிக்கப்படும்படி ஏற்படுத்தப்பட்ட தயாரிப்புகள் யாவை?*
   1. *வசனமானது __________________ இருந்து புறப்படும் என்று தேவன் வாக்களித்திருந்தார். ஏசா. 2:3*
   2. *ஆவியானவர் __________________ வருவார், அதன் மூலம் அப்போஸ்தலர்கள் முதலில் __________________, பிறகு யூதேயா, சமாரியா மற்றும் உலகத்தின் கடைசி பரியந்தமும் சாட்சி களாயிருக்க முடியும். அப். 1:8*
   3. *ஆவியானவர் வரும் பொழுது, அவர் அப்போஸ்தலர்களுக்கு __________________ போதித்து, (யோவா. 14:26) இயேசு உபதேசித்திருந்த __________________ அவர்களுக்கு நினைப்பூட்டுவார். யோவா. 16:13*
   4. *பெந்தெகொஸ்தே நாளன்று எருசலேமில் (அப். 2:5) அவர்கள் __________________ நிரப்பப்பட்டனர் (அப். 2:4) மற்றும் இயேசுவுக்குச் சாட்சி கொடுக்கத் தொடங்கினர். அப். 2:22*

III. *பாவமன்னிப்பிற்கு என்ன செய்ய வேண்டும் என்று எருசலேமில் தொடங்கிப் பிரசங்கிக்கப்பட்டது?*
   1. *விசுவாசித்தவர்கள் ______________ பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே __________________ பெறும்படிக்குப் பேதுரு கூறினார். அப். 2:36-38*
   2. *எருசலேமில் போதிக்கப்பட்ட இச்செய்தியானது __________ இனங்களுக்குமானதாக உள்ளது. லூக். 24:47*


IV. *இது போதிக்கப்பட்ட பொழுது மக்கள் எவ்விதம் பதில்செயல் செய்தனர்? (கீழ்வரும் குறிப்புகள் அப். நட. புத்தகத்தில் உள்ளன)*
   1. *2:41 -- எருசலேம் __________________*
   2. *8:12 -- சமாரியா __________________*
   3. *8:36-39 -- எத்தியோப்பியர் __________________*

4. *9:18 -- பவுல்* ____________________
5. *10:48 -- கொர்நேலியு* ____________________
6. *16:33 -- சிறை அதிகாரி* ____________________
7. *18:8 -- கொரிந்து* ____________________
8. *19:5 -- எபேசு* ____________________

V. *அவர்களின் ஞானஸ்நானத்தைத் தொடர்ந்து நடந்தது என்ன?*

1. *அவர்கள்* ____________________ *ஜீவனுள்ளவர்களாய் நடக்க வேண்டியிருந்தது. ரோமர் 6:4*
2. *அவர்களின் பாவங்கள்* ____________________ *(அப். 2:38) மற்றும்* ____________________ *பட்டன. அப். 22:16*
3. *அவர்கள்* ____________________ *மாற்கு 16:15, 16*

Copyright 1987 - Gospel Light Pub. Co. Delight, AR 71940



பாடத் தாளை எடுத்துரைத்தல்:

# "இயேசு மனிதருக்குப் புது வழியாய் இருக்கின்றாரா?"

"இயேசு மனிதருக்குப் புது வழியாய் இருக்கின்றாரா?" என்ற பாடத் தாளை முதல் படிப்பாகப் பயன்படுத்தலாம், அல்லது இது "பாவம் மற்றும் மரணம் ஆகியவற்றின் ஆதார மூலம் எது?" (பாடம் 1) என்ற பாடத் தாளைத் தொடர்ந்தோ அல்லது "தேவனுடைய திட்டம் என்ன?" (பாடம் 2) என்ற பாடத் தாளைத் தொடர்ந்தோ பயன்படுத்தலாம். "தேவனுடைய திட்டம் என்ன?" என்பதைத் தொடர்ந்து இதனைப் பயன்படுத்துவதுதான் சீரமைவான பயன்பாடாயிருக்கும்.

## நோக்கம்

இயேசுவின் இரத்தமே மனிதரின் மன்னிப்புக்கு அடிப்படை என்று எருசலேமில் பிரசங்கிக்கப்படத் தொடங்கியதைக் காண்பிப்பதென்பதே "இயேசுவே வழி" என்ற பாடத் தாளின் நோக்கமாக உள்ளது. எருசலேமில் பிரசங்கிக்கப்பட்ட மன்னிப்பின் நிபந்தனைகள் எல்லா நாடுகளுக்கு மானவைகள்.

## பாடச் சுருக்கம்

மிருக பலிகள் என்பவை உண்மையான பலியின் நிழலாய் மட்டுமே இருந்தன, மற்றும் இயேசுவின் இரத்தம் இப்பொழுது மன்னிப்பிற்கான புதிய செயல் விளைவுள்ள ஒரு வழியை அருளுகின்றது என்பதை இந்தப் பாடத் தாள் காண்பிக்கின்றது. போதிய தயாரிப்புக்குப் பிறகு, இந்தப் புதிய வழியானது எருசலேமிலும், பிறகு உலகின் எஞ்சிய பகுதிகளிலும் பிரசங்கிக்கப்பட்டது. எருசலேமில் போதிக்கப்பட்ட மன்னிப்பிற்கான இந்த நிபந்தனைகள் நடபடிகளின் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன, உலகின் எஞ்சிய பகுதிகளில் உள்ளவர்களும் இதே நிபந்தனைகளை நிறைவேற்ற வேண்டும். நடபடிகளின் புத்தகத்திலுள்ள எல்லா பதில் செயல்களும் ஒரே மாதிரியானவைகளாய் உள்ளன, எனவே மன்னிப்பிற்கான அதே நிபந்தனைகள் எல்லாருக்கும் போதிக்கப்பட வேண்டும்.

## அறிமுகம்

நியாயப்பிரமாணம் இரக்கத்தை அருள முடியாதிருந்தது என்று நாம்

முந்திய பாடத்தில் கற்றுள்ளோம். இரக்கம், கிருபை மற்றும் நீதி ஆகியவற்றை அது அருளியிருந்தால், இயேசு வீணாக, பயனற்ற வகையில் மரணம் அடைந்தார் என்றாகி விடும். இந்தப் பாடத்தில் நாம், *பழைய* உடன்படிக்கையின் கீழ் இருந்தவர்கள் அறியாமையினால் பாவம் செய்த பொழுது என்ன செய்தார்கள் என்று கண்டறியப் போகின்றோம், மற்றும் *புதிய* வழியான, புதிய உடன்படிக்கையின் கீழ் மன்னிப்புக்கு நாம் என்ன செய்ய வேண்டும் என்றும் நாம் படிக்கப் போகின்றோம்.

## I. *பழைய மற்றும் புதிய வழிகள்*

*படிப்பின் இப்பகுதியில் நாம், பழைய உடன்படிக்கையின் கீழான மன்னிப்பின் வழியும், புதிய உடன்படிக்கையின் கீழான மன்னிப்பின் வழியும் ஒரே மாதிரியானவைகளா அல்லவா என்று ஆலோசித்து அறியப் போகின்றோம். [பாடத் தாளின் பின்புறத்தில் இடது புற மேல் மூலையில் ''பழைய உடன்படிக்கை'' என்று எழுதி அதன் கீழ் சீனாய் மலையை வரையவும்.]*

*1. பொதுமக்களின் பாவநிவிர்த்திக்கென்று ஆசாரியர்கள் பயன் படுத்தியது என்ன? [லேவி. 4: 30, 31ஐ வாசிக்கவும்.] மன்னிப்புக்கு ஆசாரியர்கள் மிருகத்தின் எப்பொருளைப் பயன்படுத்தினர்? [கோடிட்ட இடத்தில் "இரத்தத்தை" என்று எழுதி நிரப்பவும்.]*

*2. மிருகத்தின் இரத்தம் பாவமன்னிப்பை அருளியதா? [எபி. 10:1ஐ வாசிக்கவும்.] மிருகத்தின் இரத்தம் என்னவாக மட்டும் இருந்தது? [கோடிட்ட இடத்தில் "நிழலாக" என்று எழுதி நிரப்பவும்.] நிழல் என்பது ஏதேனும் பொருளைக் கொண்டுள்ளதா? ஒரு ஆழமான நீரோடையை நீங்கள் ஒரு பாலத்தின் வழியாகவா அல்லது ஒரு நிழலின் வழியாகவா, எதன் மூலம் கடந்து செல்லுவீர்கள்? ஒரு நிழல் என்ன செய்ய முடியும்? நிழல் என்பது ஒரு உண்மை நிலையின் இயல்பைச் சுட்டிக்காட்டுவதாக மட்டும் இருப்பதில்லையா?*

*[எபி. 10:4ஐ வாசிக்கவும்.] மிருகத்தின் இரத்தம் எதனை நிவிர்த்தி செய்ய முடியாதிருந்தது? [கோடிட்ட இடத்தில் "பாவங்களை" என்று எழுதி நிரப்பவும்.] மிருகங்களின் இரத்தம் என்பது - சிலுவையில் இயேசு சிந்திய இரத்தம் என்ற - உண்மை நிலையின் நிழலாக மட்டுமே இருந்தது. பாடத் தாளின் பின்புறத்தில் (பக்கம் 174ஐப் பார்க்கவும்) ஒரு சிலுவையையும் அதன் நிழலையும் (சீனாய் மலையின் படத்தருகில்) வரையவும்.*

*3. மன்னிப்பின் புதிய வழியாக உள்ளது என்ன? [எபி. 10:19, 20ஐ வாசிக்கவும்.] மன்னிப்பின் புது வழியாக இருப்பது எது? [கோடிட்ட இடத்தில் "இரத்தம்" என்று எழுதி நிரப்பவும்.]*

*4. இந்தப் புதிய வழி எப்போது அமுலுக்கு வந்தது? [எபி. 9:16, 17ஐ வாசிக்கவும்.] இயேசுவின் எதன் மூலம் புதிய வழி உறுதிப்படுத்தப்பட்டது? [கோடிட்ட இடத்தில் "மரணத்தின்" என்று எழுதி நிரப்பவும்.] இயேசுவின் நாமத்தினாலே பாவமன்னிப்பு எங்கு பிரசங்கிக்கப்படத் தொடங்கிற்று? [லூக். 24:46, 47ஐ வாசிக்கவும், மற்றும் கோடிட்ட இடத்தில் "எருசலேமில்" என்று எழுதி நிரப்பவும்.]*

இந்தப் பகுதியில் நாம் கற்றுக் கொண்டுள்ளது என்ன? மன்னிப்பிற்கான பழைய வழி என்பது மன்னிப்பின் நிழலாக மட்டுமே இருந்தது, அதாவது இயேசுவின் இரத்தம்தான் புது வழியான இரண்டாம் உடன்படிக்கை மற்றும் முதலாம் உடன்படிக்கையின் கீழ் இருந்தவர்களுக்கும் கூட மன்னிப்பின் அடிப்படையாக உள்ளது என்று நாம் கற்றுக் கொண்டுள்ளோம் (எபி. 9:15). மிருகங்களின் இரத்தம் என்பது ஒரு அடையாளமாக மட்டுமே இருந்தது, ஆனால் அந்த அடையாளமானது இயேசுவின் இரத்தத்தினால் பலப்படுத்தப்பட்டது/ஆதரிக்கப்பட்டது. இயேசு சிலுவையில் மரிப்பார் என்பதை அறிவதற்கு அவர் சிலுவையில் மரிக்கும் வரை தேவன் காத்திருக்கத் தேவையில்லாதிருந்தது. படைப்புக்கு முன்பே தேவன், இயேசுவின் மரணத்தைத் திட்டமிட்டு, முன்கண்டு, முன்னறிந்து இருந்தார் (1 பேது. 1:18-20).

## II. புதிய வழிக்கான தயாரிப்புகள்

பழைய ஏற்பாடு பரிசுத்த ஆவியானவரால் தரப்பட்டிருந்தது (2 பேது. 1:19, 20) மற்றும் இயேசு பூமிக்கு வருவதற்கு முன்பே எழுதப்பட்டிருந்தது, ஆனால் இயேசு சிலுவையில் மரித்திருந்த பிறகும் கூட அவரது போதனை எதுவும் எழுதப்பட்டிருந்ததில்லை. இயேசுவின் போதனையை நினைவு கூருவதற்கான சில வழிமுறைகளும், புதிய வழியைப் பிரசங்கிக்கத் தொடங்க வேண்டிய இடமும் அருளப்பட வேண்டியதாயிருந்தது.

1. கடைசி நாட்களில் கர்த்தருடைய வசனமானது ஒரு குறிப்பிட்ட நகரிலிருந்து புறப்படும் என்று தேவன் வாக்களித்திருந்தார் [ஏசா. 2:3ஐ வாசிக்கவும்.] எந்த நகரிலிருந்து கர்த்தருடைய வசனம் புறப்படும்? [கோடிட்ட இடத்தில் “எருசலேமில்” என்று எழுதி நிரப்பவும்.] இது “கடைசி நாட்களில்” நடைபெறுவதாக இருந்தது (ஏசா. 2:2). புதிய ஏற்பாட்டின் படியாக நாம் இப்பொழுது கடைசி நாட்களில் இருக்கின்றோம் (எபி. 1:1, 2), இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குப் பின் வந்த முதல் பெந்தெகொஸ்தே நாளன்று பேதுருவும் கூட இதைச் சுட்டிக்காட்டினார் (அப். 2:1, 14).

2. அப்போஸ்தலர்களின் ஊழியத்திற்கென்று அவர்களைத் தயாரிப்பதற்காக ஆவியானவர் அனுப்பப்படுவாரென்று இயேசு வாக்களித்தார். [அப். 1:8ஐ வாசிக்கவும்.] ஆவியானவர் எதனோடே வருவார் மற்றும் அதன் மூலமாக அப்போஸ்தலர்கள் எங்கு சாட்சியளிக்கத் தொடங்க முடியும்? [கோடிட்ட இடங்களில் “பெலத்தோடே” மற்றும் “எருசலேமிலும்” என்று எழுதி நிரப்பவும். பாடத் தாளின் பின்புறத்தில் (பக்கம் 174ஐப் பார்க்கவும்) எருசலேமைக் குறிக்கும் வகையில் ஒரு கட்டம் வரைந்து, வசனமானது எருசலேமில் இருந்து யூதேயா, சமாரியா மற்றும் உலகின் எஞ்சிய பகுதிகளுக்குப் புறப்பட்டுச் செல்லுவதைக் குறிப்பிடவும். அக்கட்டத்திற்கு மேல் உள்ள இடத்தில் “இயேசு” என்றெழுதி, அதன் கீழ் “பரிசுத்த ஆவியானவர்” என்றெழுதவும்.]

3. ஆவியானவர் அப்போஸ்தலர்களை எவ்விதத்தில் தயாரிப்புச் செய்வார்? [யோவா. 14:26ஐ வாசிக்கவும்.] அப்போஸ்தலர்களுக்கு அவர் எவ்வளவு போதிப்பார்? மற்றும் இயேசு உபதேசத்திருந்தவற்றில்

எவ்வளவை அவர்களுக்கு அவர் நினைவூட்டுவார்? [கோடிட்ட இடங்களில் "எல்லாவற்றையும்" என்று எழுதி நிரப்பவும்.] அப்போஸ்தலர்களுக்கு அவர் எவ்வளவு சத்தியத்தை அளிப்பார்? [யோவா. 16:13ஐ வாசிக்கவும்.] அவர்களுக்கு அவர் எவ்வளவு சத்தியத்தைக் கொடுப்பார்? [கோடிட்ட இடத்தில் "எல்லாவற்றையும்" என்று எழுதி நிரப்பவும்.]

[அப்போஸ்தலர்களுக்கு மட்டுமே ஆவியானவர் சகல சத்தியங் களையும் அருளினார் என்பது பற்றி கற்பவரிடத்தில் கேள்வி/ஐயப்பாடு எதுவும் இருக்குமென்றால், இந்த வாக்குத்தத்தம் கொடுக்கப்பட்ட போது அப்போஸ்தலர்கள் மட்டுமே இருந்தார்கள் என்பதைச் சுட்டிக் காட்டுங்கள் (யோவா. 13:1-4; மத். 26:20; லூக். 22:13, 14).]

4. எப்பொழுது மற்றும் எங்கு பரிசுத்த ஆவியானவர் அப்போஸ்தலர் கள் மீது இறங்கி வந்தார்? [அப். 2:4ஐ வாசிக்கவும்.] ஆவியானவருக்காக அவர்கள் காத்துக் கொண்டிருக்கும்படி கூறப்பட்ட (லூக். 24:49; அப். 1:4) இடமான எருசலேமில் அவர்கள் காத்துக் கொண்டிருக்கையில் (அப். 2:5) அவர்கள் யாரால் நிரப்பப்பட்டனர்? [கோடிட்ட இடத்தில் "பரிசுத்த ஆவியானவரால்" என்று எழுதி நிரப்பவும்.] அவர்கள் அதன் பிறகு இயேசுவைக் குறித்துச் சாட்சியளிக்கத் தொடங்கினர் (அப். 2:22).

[பாடத் தாளின் பின்புறத்தில் (பக்கம் 174ஐப் பார்க்கவும்) இயேசு அடக்கம் செய்யப்பட்டு, உயிர்த்தெழுந்து, பரலோகத்திற்கு ஏறிச் சென்றதை வரையவும். இதற்கு மேல் "புது உடன்படிக்கை" என்று எழுதவும்.] பெந்தெகொஸ்தே பண்டிகையானது பஸ்கா பண்டிகைக்கு ஐம்பது நாட்களுக்குப் பிறகு வந்தது (லேவி. 23:15), எனவே அது பஸ்கா பண்டிகையின் முடிவில் இயேசு உயிர்ப்பிக்கப்பட்டு ஐம்பது நாட்களுக்குப் பிறகு வந்தது. அவர் தம்முடைய உயிர்த்தெழுதலுக்குப் பிறகு பரலோகத்திற்கு எழுந்தருளிச் செல்லும் முன்பு இந்த பூமியில் நாற்பது நாட்கள் இருந்தார் (அப். 1:3). அவர் பரலோகம் திரும்பிச் சென்ற பத்தாவது நாளிலேயே பெந்தெகொஸ்தே பண்டிகை வந்தது. ஆகையால் இயேசு பரலோகம் திரும்பிச் சென்ற பத்தாவது நாளில் ஆவியானவர் அப்போஸ்தலர்களின் மீது அனுப்பப்பட்டார். [பாடத் தாளின் பின்புறத்தில் (பக்கம் 174ஐப் பார்க்கவும்) இதைச் சுட்டிக்காட்டுவதற்கு "40 நாட்கள்" என்றும், "10 நாட்கள்" என்றும் எழுதவும்.]

இந்தப் பகுதியில் நாம் கற்றுக் கொண்டுள்ளது என்ன? கடைசி நாட்களில் கர்த்தருடைய வசனமானது எருசலேமிலிருந்து புறப்படும் என்று தேவன் தீர்க்கதரிசனம் உரைத்து, அதற்குத் தயாரிப்புச் செய்தார் என்று நாம் கற்றுக் கொண்டுள்ளோம். வேத வாக்கியங்களில் தேவன் வாக்களித்திருந்த படியாகவே இயேசுவின் நாமத்திலே எருசலேமில் தொடங்கி இரட் சிப்பைப் பிரசங்கிப்பதற்கு அப்போஸ்தலர்களைத் தயாரிக்கும்படி அவர்கள் மீது பரிசுத்த ஆவியானவரை இயேசு அனுப்பினார் (லூக். 24:46, 47). இதுவே இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குப் பின்பு வந்த முதல் பெந்தெகொஸ்தே நாளன்று அவர்கள் செய்த செயலாயிருந்தது (அப். 2:5, 22).

### III. மன்னிப்பு வழங்கப்பட்டது

*1. பேதுருதான் முதன் முதலாக இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் இரட்சிப்பைப் பற்றிப் பிரசங்கித்தவராய் இருந்தார். என்ன செய்ய வேண்டும் என்று பேதுருவிடம் கேட்டவர்களிடத்தில் அவர், சீனாய் மலையில் போதிக்கப்பட்டவைகளை அவர்கள் நிறைவேற்ற வேண்டும் என்று கூறியிருந்தால், அவர்கள் என்ன செய்ய வேண்டுமென்று அவர் கூறியிருப்பார்? அவர்கள் மிருக பலியைச் செலுத்த வேண்டுமென்று (அல்லவா) அவர் கூறியிருப்பார். இயேசுவின் மரணத்தினுடைய நிறைவேறுதலுடன் இப்பொழுது இயேசுவின் இரத்தத்தினால் மன்னிப்பு என்ற புதிய வழியானது தொடங்கியிருந்தது. இந்தப் புதிய வழியில் மன்னிப்பிற்கான நிபந்தனைகள் யாவை? [அப். 2:38ஐ வாசிக்கவும்.] இயேசுவில் விசுவாசம் கொண்டவர்கள் என்ன செய்து, இயேசு கிறிஸ்துவின் பெயரால் எதைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று கூறப்பட்டார்கள்? [கோடிட்ட இடங்களில் "மனந்திரும்பி" மற்றும் "ஞானஸ்நானம்" என்று எழுதி நிரப்பவும்.]*

*2. அவர்கள் மிருகபலியைச் செலுத்தும்படி பேதுரு ஏன் கூறவில்லை? இயேசு சிலுவையில் மரித்த பொழுது பழைய வழியானது முடிவுக்குக் கொண்டு வரப்பட்டிருந்தது. புதிய வழிக்கான தேவைகளாக எருசலேமில் தொடங்கி பேதுரு பிரசங்கித்தது என்ன? [லூக். 24:47ஐ வாசிக்கவும்.] எருசலேமில் பேதுரு பிரசங்கித்த இந்தச் செய்தியானது யாருக்குரியது? [கோடிட்ட இடத்தில் "எல்லா" என்று எழுதி நிரப்பவும். பாடத் தாளின் பின்புறத்தில் "எல்லா இனங்கள்" என்பதன் கீழ், "மனந்திரும்பி, பாவ மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெறுங்கள்" என்று எழுதிக் கொள்ளவும் (அப். 2:38).]*

*இந்தப் பகுதியில் நாம் கற்றுக் கொண்டுள்ளது என்ன? புதிய வழியின் கீழ், இயேசுவில் விசுவாசம் கொண்டவர்கள் மனந்திரும்பி, அவர்களின் பாவங்களை இயேசுவின் இரத்தம் சுத்திகரிக்கும்படியாக ஞானஸ்நானம் பெற வேண்டியதாயிருக்கின்றது என்று நாம் கற்றுக் கொண்டுள்ளோம்.*

### IV. பதில்செயல்கள்

*எருசலேமில் பிரசங்கிக்கப்பட்ட செய்தி உலகின் எஞ்சிய பகுதியில் பிரசங்கிக்கப்பட்ட பொழுது, அப்பகுதிகளின் மக்கள் எவ்விதம் பதில்செயல் செய்தார்கள்? அவர்கள் எல்லாரும் அதே வகையாகப் பதில்செயல் செய்தார்களா? நடபடிகள் புத்தகத்தின் (மனமாற்ற) நிகழ்ச்சிகள் எல்லாவற்றிலும் ஒருவர் மன்னிக்கப்படுவதற்குச் செய்யத் தேவையானது பற்றி என்ன பிரசங்கிக்கப்பட்டது என்று கூறப்படுவதில்லை, ஆனால் அவர்கள் எவ்விதத்தில் பதில்செயல் செய்தனர் என்பதை இந்நூல் (நடபடிகள்) கூறுகின்றது. எருசலேமில் தொடக்கத்தில் பிரசங்கிக்கப் பட்டதே உலகின் எஞ்சிய பகுதிகளில் பிரசங்கிக்கப்படும் என்று உறுதிப்பாடு கொடுக்கப்பட்டுள்ள காரணத்தினால் ஒவ்வொரு (மனமாற்ற) நிகழ்ச்சியிலும் மன்னிப்பின் நிபந்தனைகளை (எடுத்துத்) தர வேண்டும் என்ற அவசியம் இல்லை. உலகின் எஞ்சிய பகுதிகளில் என்ன பிரசங்கிக்கப்*

பட்டது என்பதைக் கண்டறிவதற்கு, எருசலேமில் பிரசங்கிக்கப்பட்டது என்ன என்பதைக் கண்டறிதலே போதுமானதாக உள்ளது.

இதனைப் பின்வரும் எடுத்துக்காட்டிற்கு ஒப்பிடலாம்: சுத்திகரிப்புக் கருவியை விற்பனை செய்யும் நிறுவனம் ஒன்றின் விற்பனை மேலாளர் ஒருவர் தமது விற்பனையாளர்களிடத்தில், ஒரு குறிப்பிட்ட சுத்திகரிப்புக் கருவியை இந்தியாவில் உள்ள ஒவ்வொருவரிடத்திலும் செயல் விளக்கப்படுத்தி சென்னை தொடங்கி எல்லா இடங்களிலும் அதன் பெறுமான மதிப்புக்கு அதனை விற்கும்படி அறிவுறுத்துகின்றார் என்று வைத்துக் கொள்வோம். என்ன நடந்தது என்பதைக் கூறும் நபர் அதைப் பின்வரும் வகையில் கூற முடியும்:

விற்பனையாளர்கள் சென்னை சென்று சுத்திகரிப்புக் கருவியைச் செயல்விளக்கப்படுத்தினார்கள். சென்னையிலிருந்த மக்களில் சிலர் ஆர்வம் கொண்டு, "சுத்திகரிப்புக் கருவிக்கு நாங்கள் செலுத்த வேண்டிய விலை எவ்வளவு?" என்று கேட்டார்கள். அதற்கு அந்த விற்பனையாளர்கள், "சுத்திகரிப்புக் கருவியை நீங்கள் ரூ. 13,200க்கு வாங்கலாம்" என்று பதில் அளித்தார்கள். செயல் விளக்கத்தினால் திருப்தியடைந்தவர்கள் சுத்திகரிப்புக் கருவியை வாங்கிக் கொண்டனர்.

அவர்கள் சுத்திகரிப்புக் கருவியைச் செயல்விளக்கப் படுத்துவதற்காக அங்கிருந்து கோயம்புத்தூருக்குச் சென்றார்கள். அங்கு செயல்விளக்கத்தில் திருப்தியடைந்தவர்கள் சுத்திகரிப்புக் கருவியை வாங்கினார்கள். பிறகு அவர்கள் மதுரைக்குச் சென்றார்கள், அங்கும் மக்கள் சுத்திகரிப்புக் கருவிகளை வாங்கினார்கள்.

இதைப் பற்றி எடுத்துரைப்பவர் சுத்திகரிப்புக் கருவியை ஒவ்வொரு முறையும் வாங்கியவர்கள் ரூ. 13,200 கொடுத்து வாங்கினார்கள் என்று மீண்டும் மீண்டும் கூறுவது என்பது அவசியமா? நிச்சயமாகவே அது அவசியமில்லை.

இது போலவே, லூக்கா நடபடிகளின் புத்தகத்தை எழுதியதில், பாவமன்னிப்படைய விரும்புபவர்கள் பாவமன்னிப்புக்காக மனந்திரும்பி ஞானஸ்நானம் பெறுவது அவசியம் என்று கூறப்பட்டதை ஒவ்வொரு முறையும் குறிப்பிடவில்லை. எருசலேமில் பிரசங்கிக்கப்பட்ட அதே விஷயம் உலகின் எஞ்சிய பகுதிகளில் பிரசங்கிக்கப்பட்டது என்பதால், இது புரிந்து கொள்ளப்பட வேண்டியதாயிருந்தது. ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டதால் அவர்கள் பதில்செயல் செய்தனர் என்ற உண்மையானது அவர்கள் பாவமன்னிப்புக்கென்று (மனந்திரும்பி) ஞானஸ்நானம் பெற வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டிருந்தனர் என்பதைச் சுட்டிக் காட்டுகிறது.

1-8. மக்கள் எவ்விதம் பதில்செயல் செய்தனர்? [2:41; 8:12; 8:36-39; 9:18; 10:48; 16:33; 18:8; 19:5 ஆகிய வசனப் பகுதிகள் ஒவ்வொன்றையும் வாசித்த பிறகு கோடிட்ட இடங்களில் "ஞானஸ்நானம் பெற்றார்(கள்)" என்று எழுதி நிரப்பவும்.] பதில்செயல்கள் எப்பொழுதும் சீரானதாகவே இருந்தன என்ற உண்மையானது செய்தியும் சீரானதாகவே இருந்திருக்க வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்ட வேண்டும். இரட்சிக்கப்படுவதற்கு

அவர்கள் செய்யும்படி கூறப்பட்டது என்ன என்பது வெளிப்படுத்தப்படா திருந்தாலும், பதில்செயல்களின் சீரான தன்மையானது எருசலேமில் பிரசங்கிக்கப்பட்ட ஒவ்வொரு வார்த்தையும் மற்ற மக்கள் யாவருக்கும் போதிக்கப்பட்டது என்பதைச் சுட்டிக் காண்பிக்க வேண்டும்.

இந்தப் பகுதியில் நாம் கற்றுக் கொண்டுள்ளது என்ன? எல்லா இடங்களிலும் வசனம் பிரசங்கிக்கப்பட்டது, எல்லாரும் ஒரே விதமாகவே பதில்செயல் செய்தனர் என்பதை நாம் கற்றுள்ளோம்.

## V. ஞானஸ்நானத்திற்குப் பிறகு

*1. ஒருவர் ஞானஸ்நானம் பெற்ற பிறகு என்ன எதிர்பார்க்கப்பட வேண்டியுள்ளது? ஞானஸ்நானம் பெற்ற நபர் எவ்வகையான வாழ்வை வாழ வேண்டியுள்ளது?* [ரோமர் *6:4*ஐ வாசிக்கவும்.] *ஞானஸ்நானம் பெற்ற நபர் வாழ வேண்டிய வாழ்வின் தன்மை என்ன?* [கோடிட்ட இடத்தில் "புதிய" என்று எழுதி நிரப்பவும்.]

*2. ஒருவர் ஏன் ஞானஸ்நானம் பெற வேண்டும்?* [அப். *2:38*ஐ வாசிக்கவும்.] *விசுவாசிகள் என்ன காரணத்திற்காக மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற வேண்டும் என்று பேதுரு கூறினார்?* [கோடிட்ட இடத்தில் ''மன்னிக்கப்பட்டன'' என்று எழுதி நிரப்பவும்.] *தர்சுப் பட்டணத்து சவுல் [பின்னாளில் அப்போஸ்தலரான பவுல் என்று அழைக்கப்பட்டவர்] தமது பாவங்கள் கழுவப்படுவதற்கு என்ன செய்ய வேண்டும் என்று அவருக்குக் கூறப்பட்டது?* [அப். *22:16*ஐ வாசிக்கவும்.] *சவுல் எழுந்து ஞானஸ்நானம் பெறும்படி கூறப்பட்டார் அப்பொழுது அவருடைய பாவங்கள் என்ன செய்யப்பட்டன?* [கோடிட்ட இடத்தில் "கழுவ" என்று எழுதி நிரப்பவும்.]

*3. உலகெங்கும் சென்று சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி இயேசு தம் அப்போஸ்தலர்களுக்குக் கூறினார். சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுகையில் யார் இரட்சிக்கப்படுவார்கள் என்று இயேசு கூறினார்?* [மாற்கு *16:15, 16*ஐ வாசிக்கவும்.] *சுவிசேஷத்தில் விசுவாசமுள்ளவர்களாகி ஞானஸ்நானம் பெறுபவர்கள் என்ன செய்யப்படுவார்கள் என்று இயேசு கூறினார்?* [கோடிட்ட இடத்தில் "இரட்சிக்கப்பட்டனர்" என்று எழுதி நிரப்பவும்.]

இந்தப்பகுதியில் நாம் கற்றுக் கொண்டுள்ளது என்ன? ஞானஸ்நானம் பெற்ற நபர் ஒருவர் புதிய வாழ்வை வாழும்படி எதிர்பார்க்கப்படுகின்றார் என்று நாம் கற்றுக் கொண்டுள்ளோம். இயேசுவில் விசுவாசம் கொண்ட நபர் ஒருவர், தன் பாவங்களிலிருந்து மனந்திரும்பி ஞானஸ்நானம் பெறும் பொழுது மன்னிக்கப்படுகின்றார்; அவரது பாவங்கள் கழுவப்படுகின்றன; மற்றும் அவர் இரட்சிக்கப்படுகின்றார்.

## தொகுப்புரை

மனிதருக்கு இரட்சிப்பின் வழியாக இருப்பவர் இயேசுவே என்று நாம் இந்தப் பாடத்தில் கற்றோம். இரட்சிப்பிற்கான அவருடைய *புது* வழி என்பது நியாயப்பிரமாணத்தின் நிபந்தனைகளான முதலாம் உடன் படிக்கையின் *பழைய* வழியைப் போன்று இருப்பதில்லை.

I. *பழைய மற்றும் புது வழிகள் ஒரே மாதிரியானவைகளாய் உள்ளனவா?* பழைய வழி என்பது மிருகங்களின் இரத்தம் என்ற *நிழலைத்* தேவைப்படுத்திற்று, ஆனால் புது வழியானது இயேசுவின் இரத்தம் என்ற *உண்மை நிலையை* அருளுகின்றது. இந்த *வழியானது* பெந்தெகொஸ்தே நாளன்று எருசலேமிலிருந்து பிரசங்கிக்கப்படத் தொடங்கியது.

II. *புது வழியானது போதிக்கப்படும்படி செய்யப்பட்ட தயாரிப்புகள் யாவை?* தேவனுடைய வசனம் கடைசி நாட்களில் எருசலேமிலிருந்து புறப்படும் என்று அவரே வாக்குத்தத்தம் செய்திருந்தார், இது அப்போஸ் தலர்கள்மீது பரிசுத்த ஆவியானவர் இறங்கிய பொழுது தொடக்கம் பெற்றது. அவர்கள், பெந்தெகொஸ்தே நாள் அன்று ஆவியானவருடைய உதவியின் மூலமாக சகல சத்தியத்திற்குள்ளும் வழி நடத்தப்பட்டார்கள். ஆவியானவரின் வருகையுடன் அவர்கள் முதலில் எருசலேமிலும் பிறகு முழு உலகிலும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே பாவமன்னிப்பைப் பிரசங்கிக்கத் தொடங்குவதற்குத் தயார் செய்யப்பட்டார்கள்.

III. *பாவமன்னிப்புக்கு என்ன செய்ய வேண்டியது தேவை என்று எருசலேமில் போதிக்கப்படத் தொடங்கியது?* அவர்கள் மனந்திரும்பி, பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெறுதல் அவசியம் என்று பேதுரு போதித்தார்.

IV. *இது போதிக்கப்பட்ட பொழுது, மக்கள் எவ்விதத்தில் பதில்செயல் செய்தார்கள்?* அவர்கள் விசுவாசித்தல் மற்றும் மனந்திரும்புதல் (இது எடுத்துரைக்கப்பட்டுள்ளது அல்லது சில நிகழ்ச்சிகளில் மறைமுகமாய் உள்ளதாகக் காணப்படுகின்றது) ஆகியவற்றினால் பதில்செயல் செய்தனர், மற்றும் ஞானஸ்நானம் பெற்றனர் (இது பல நிகழ்ச்சிகளில் திட்டவட்டமாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது).

V. *அவர்களின் ஞானஸ்நானத்தைத் தொடர்ந்து என்ன நடந்தது?* அவர்கள் மன்னிக்கப்பட்டதால், அவர்களின் பாவங்கள் கழுவப்பட்டதால், மற்றும் அவர்கள் இரட்சிக்கப்பட்டதால் அவர்கள் ஒரு புதிய வாழ்வை வாழும்படி எதிர்பார்க்கப்பட்டார்கள்.

பேதுரு இன்று இங்கிருந்தால், மக்கள் மன்னிக்கப்படுவதற்கு என்ன செய்யும்படி அவர் பிரசங்கிப்பார் என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்? பேதுரு பிரசங்கித்தவற்றையே நீங்கள் கேட்கின்ற பிரசங்கியார்கள் பிரசங்கிக் கின்றார்களா?

[ஞானஸ்நானத்தைக் குறித்துக் கேள்விகள் எழுந்தால், அடுத்த பாடத்தில் இது மிகவும் முழுமையாக எடுத்துரைக்கப்படும் என்று கற்பவர்களுக்கு உறுதிப்படுத்துங்கள். அடுத்த பாடத்திற்கான ஒரு நேரத்தை ஏற்பாடு செய்யுங்கள்.]